பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

21 11 2023 TUESDAY 12.40 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- 14-ஆவது இந்தியா – ஆஸ்திரேலியா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது
- உலக மீன்வள இந்தியா 2023 மாநாட்டை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா அகமதாபாதில் இன்று தொடங்கிவைத்தார்.
- அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நோக்கம் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- உலக தொலைக்காட்சி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

- சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<<<>>>>>

14-ஆவது இந்தியா – ஆஸ்திரேலியா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு புதுதில்லியில் இன்று நடைபெற்று வருகிறது.

இந்த மாநாட்டில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு பென்னி வாங் கலந்துகொண்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு, மண்டலம் மற்றும் உலக அளவிலான முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்கவுள்ளனர்.

2009-ஆம் ஆண்டு முதல், இந்தியா – ஆஸ்திரேலியா இடையே மிக வலுவான நட்புறவு இருந்து வருகிறது என்றும், இந்தோ – பசிபிக் பகுதியில் பல்வேறு திட்டங்கள் 'Quad ' அமைப்பு மூலமாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆஸ்திரேலிய வர்த்தகத்தில் பங்களிக்கும் ஆறாவது மிகப்பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

இரு நாடுகளுக்கும் இடையே, 2021-ஆம் ஆண்டு 22 புள்ளி இரண்டு பில்லியன் டாலர் அளவிற்கு இருந்துவந்த வர்த்தகம், கடந்த ஆண்டு 31 புள்ளி நான்கு பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இது 41 சதவீத வளர்ச்சியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>

உலக மீன்வள இந்தியா 2023 மாநாட்டை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா அகமதாபாதில் இன்று தொடங்கிவைத்தார்.

குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல், மீன்வளத்துறை இணையமைச்சர்கள் டாக்டர் எல். முருகன், டாக்டர் சஞ்ஜீவ்குமார் Balyan ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

பத்து நாடுகளை சேர்ந்த உயர்மட்ட குழு உறுப்பினர்கள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்வேறு மீனவர் அமைப்புகளை சார்ந்தவர்கள் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தில் பேசிய குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திர பட்டேல், நாட்டிலேயே மிக அதிக அளவிலான கடல் பரப்பை குஜராத் கொண்டுள்ளதாகவும், இங்கு மீன் உற்பத்தி அதிக அளவில் உள்ளதாகவும் கூறினார்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்களில், 17 சதவீதம் குஜராத் மாநிலத்திலிருந்து அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா, மீன்வளத்துறை தொடர்பான கண்காட்சியினை அகமதாபாதில் உள்ள அறிவியல் நகரில் தொடங்கிவைத்தார்.

பின்னர் அவர், பிரான்ஸ், நார்வே, ஆஸ்திரேலியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்த மாநாட்டில் அருணாச்சலப்பிரதேசம், ஹரியானா, உத்தரப்பிரதேசம், இமாச்சலப்பிரதேசம், மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா, கோவா, மற்றும் ஆந்திரப்பிரதேசத்தை சேர்ந்த மீன்வளத்துறை அமைச்சர்கள் பங்கேற்றுள்ளனர்.

இரண்டு நாள் நடைபெறும் இந்த மாநாட்டில், ஐந்தாயிரம் பேர் கலந்துகொண்டுள்ளனர்.

இதில், பல்வேறு முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<>>>>>

ராஜஸ்தான் சட்டப்பேரவைக்கான தேர்தல் நடைபெற இன்னும் மூன்று நாட்களே இருக்கும் நிலையில், பல கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் தங்களது வேட்பாளர்களுக்காக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக Antha, Kota மற்றும் Karauli ஆகிய இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்களில் இன்று உரையாற்றவுள்ளார்.

இன்று மாலை அவர் ஜெய்பூர் நகரில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

பிஜேபி தலைவர்களில் ஒருவரும், உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, Sawae Madhopur என்ற இடத்தில் பிஜேபி வேட்பாளர்களுக்காக பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி, உதய்பூர், Jaalore, Barmer மாவட்டங்களில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

ராஜஸ்தான் முதலமைச்சர் திரு அசோக் கெலாட், ஐந்து மாவட்டங்களில் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார்.

பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் செல்வி மாயாவதி, ஆசாத் சமாஜ் கட்சியின் தலைவர் சந்திரசேகர ஆசாத், ராஷ்ட்ரிய லோக்தள் தலைவர் திரு ஜெயந்த் சௌத்ரி ஆகியோர் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையே, காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கையை இன்று வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<<<<<>>>>>

தெலங்கானாவில் சட்டப்பேரவைத் தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

இம்மாதம் 30-ஆம் தேதி அங்கு தேர்தல் நடைபெறுகிறது.

இதனையடுத்து, பல்வேறு கட்சித்தலைவர்கள் மாநிலத்தில் உள்ள மூலை முடுக்குகளில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

BRS கட்சித்தலைவர் திரு சந்திரசேகர ராவ், கடந்த ஒரு மாத காலத்தில் 70 பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

பிஜேபி மற்றும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் தங்களது கட்சி வேட்பாளர்களுக்காக அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

<<<<<<<<>>>>>

அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நோக்கம் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தின் இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

பின்னர் பேசிய அவர், கல்வியை மாநிலப்பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என்று கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், பொதுப்பட்டியலில் உள்ள கல்வி மாநிலப்பட்டியலுக்கு வந்தால்தான் அனைவருக்கும் கல்வி கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் - மு.க.ஸ்டாலின் - 23 செகண்ட்ஸ்)*

நாட்டிலேயே இசைக்கென தனி பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில்தான் உள்ளது என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு முதலமைச்சரே வேந்தராக இருந்தால்தான் பல்கலைக்கழகங்கள் மிகச் சிறப்பாக செயல்படும் என்று அவர் கூறினார்.

டாக்டர் ஜெ ஜெயலலிதா இசைப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டு வந்த அரசு மானியம் ஒரு கோடி ரூபாயிலிருந்து, 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இசை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பிரபல பின்னணி பாடகி திருமதி பி. சுசிலாவுக்கு முனைவர் பட்டத்தை வழங்கி அவர் கௌரவித்தார்.

<<<<<<<>>>>>

புகழ்பெற்ற கண் மருத்துவரும், சங்கர நேத்ராலயா மருத்துவமனையின் நிறுவனருமான டாக்டர் எஸ் எஸ் பத்ரிநாத் இன்று காலமானார். அவருக்கு வயது 83.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், எண்ணற்ற மக்களுக்கு கண்ணொளி பாய்ச்சிய டாக்டர் பத்ரிநாத் அவர்களின் மறைவு மருத்துவத்துறைக்கு பேரிழப்பு என்று கூறியுள்ளார்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மருத்துவத்துறை நண்பர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துக்கொள்வதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

உலக தொலைக்காட்சி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு “அணுகக்கூடிய ஊடகம்” என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்படுகிறது.

1996-ஆம் ஆண்டு இதேநாளில், ஐக்கிய நாடுகளின் சபையில் முதலாவது தொலைக்காட்சி தினம் கொண்டாடப்பட்டது.

அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 21-ஆம் தேதி இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

மின்னணு மற்றும் சமூக ஊடகங்களில் பல்வேறு தவறான தகவல்கள் பரவி வரும் காலத்தில், அரசு சார்பில் நடத்தப்பட்டுவரும் தொலைக்காட்சி வாயிலாக விருப்பு, வெறுப்பற்ற உண்மையான செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்நாளை யொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>

உத்தரகாண்ட் மாநிலம் சில்க்யாரா சுரங்கத்தில் சிக்கியுள்ள 41 தொழிலாளர்களை மீட்கும் பணி 10-வது நாளாக போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

என்டோஸ்கோப்பி கேமரா மூலமாக எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் வீடியோ படங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

அதில் தொழிலாளர்கள் பத்திரமாக இருப்பது தெரியவந்துள்ளது.

அவர்களுக்கு, குழாய் மூலம் உணவு, குடிநீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை வழங்கப்பட்டு வருவதாக மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களை மீட்பதற்கு புனேயில் இருந்து இயந்திரங்கள் விரைவில் கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுரங்கத்தின் மீது செங்குத்தாக துளையிட்டு, தொழிலாளர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்த இணை, 21-13, 21-10 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் Ben Lane – Sean Vendy இணையை வென்றது.

---------------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டி தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று கத்தாரை எதிர்கொள்கிறது.

புவனேஷ்வரில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>